# சங்க அகப்பாடல்களில் உளவியல் கூறுகள்

*முனைவர் பா. விஜயகுமார்*
உதவிப் பேராசிரியர்
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியப் பயில் ஆய்வுத்துறை
குவகாத்திப் பல்கலைக் கழகம், குவகாத்தி, அஸ்ஸாம்

**மலர்: 4**

**இதழ்: 3**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2020**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

சங்க காலம் ஒரு பொற்காலம் என்பர். அக்காலகட்டத்தில் தோன்றிய இலக்கியமும் பிற்காலத்தில் வளர்ந்த துறையான உளவியலும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்பு கொண்டவையாக உள்ளன. சங்க இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதால் அதனுள் உளவியல் கூறுகளை அதிக அளவில் காணமுடிகிறது. வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களினால் உருவான மனநிலையின் பிரதிபலிப்பாகவே அக மற்றும் புறத்திணை பாடல்கள் அமைந்துள்ளன. அகத்திணைப் பாடல்களின் பாடுபொருள் ஏதேனும் ஒரு மனநிலையினையோ அல்லது அந்த மனநிலைக்குரிய சுழலையோ பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

## முன்னுரை

உளவியல் என்பதன் ஆங்கிலப் பதம் "Psychology" ஆகும். இது மனிதனின் ஆழ்மனத்தோடும், அதன் இயங்கு நிலையோடும் தொடர்புடையது. உளவியல்சாராததுறைகளே இன்று இல்லை என்று கூறும் அளவிற்கு இன்று காணப்படும் அனைத்து துறைகளுக்குள்ளும் உளவியலின் தேவை நன்கு உணரப்பட்டிருக்கிறது. கல்வி உளவியல், வணிக உளவியல், மருத்துவ உளவியல் மற்றும் அரசியலுக்கான உளவியல் என அதன் பன்முகத்தன்மை விரிந்து செல்கிறது. உளவியலும் இலக்கியமும் என இன்று பல்வேறு ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றாலும் அவை பிராய்ட், யுங், லக்கன் போன்ற உலவியலாளர்கள் கலை இலக்கியம் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்தியல்களுக்கும், வரன்முறைகளுக்கும் ஏற்ப தமிழில் இன்னமும் முழுமைபெறவில்லை என கூறலாம். அந்த வகையில் சங்க அக இலக்கியங்களை உளாவியல்சார் கருத்துகளின் அடிப்படையில் இன்னும் ஆராய வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. சங்க இலக்கியத்தை உளவியளோடு தொடர்புபடுத்தி ஆய்வதன் மூலம் அதில் மறைந்து கிடக்கும் உளவியல்சார் சிந்தனைக் கூறுகளையும் ஏனையபிற செய்திகளையும் வெளிக்கொணரமுடியும்.

**உளவியல்**

உளவியல் என்பதற்கு திட்டவட்டமான வரைவிலக்கணம் ஒன்றைக்கூறிவிட முடியாது. எனினும் உளவியலாளர்களான பிராய்ட், யுங், லக்கான் போன்றோர் கூறிய கருத்துக்களை வரையரைகளாகக் கொள்ளலாம். உளவியல் என்பதற்கு "மனித மனம் செயல்படுவதைக் குறித்தும் மனத்தின் வெளிப்பாடுகளான நடத்தை மற்றும் குணம் குறித்தும் ஆராயும் அறிவியல் துறை" என்று க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

"சிக்மண்ட் பிராய்ட்" (Sigmund Freud) மனத்தின் இயல்பு , பாகுபாடு, செயற்பாடு என்னும் நிலைகளில் உளவியலை ஆராய்ந்து உளவியலுக்கு அறிவியல் நிலைத்தகுதி அளித்தார். இவரே இலக்கியப் படைப்புகளை ஆராயப்பயன்படும் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) பற்றி முதன் முதலில் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கியவர் ஆவார்.

பிராய்டும், யுங்கும் மனித மனத்தின் செயல்பாடுகளுக்கு அடிமனம் எவ்வாறு காரணமாகிறது என்பதையும் விளக்கியுள்ளனர். இதன் அடிப்படையில் இலகியப் படைப்புகளில் கையாளப்பெறும் குறியீடுகள் போன்றனவறை ஆராயும் உளவியல் சிந்தனைகளுக்கு வித்திட்டவர் இவர்களே ஆவர். இந்த இருவராலும் தெளிவு படுத்தப்பெற்ற அடிமனம், அறிமனம், என்னும் பாகுபாட்டில் லக்கான் அதிகம் ஆர்வம் கொள்ளவில்லை. மாறாக, அடிமனம் எவ்வாறு தொழிற்படுகிறது, அடிமனச் செயற்பாட்டிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைக் குறித்தே ஆராய்ந்தார். முழுக்க முழுக்க தன்னுணர்ச்சி பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள தொல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாக காணமுடியும்.

சங்க இலகியங்கள் குறித்து பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்ற இக்கால கட்டத்தில் சங்ககாலப் புலவர்களின் பாடல்களை உளவியல் நோக்கில் அனுகுதல் என்பது அவசியமாகிறது. இத்தகைய ஆய்வுகளை applied psycho analysis என்பர். அதாவது மன அலசல் கோட்பாட்டை இலக்கியம் கலை, வரலாறு, மானுடவியல், மதம் போன்ற பிறதுறைகளுக்கும் ஆய்விற்காகப் பயன்படுத்துதல் ஆகும். அவ்வாறு பயன்படுத்தும் போது ஒரு தொல்மரபினரின் உளவியல் ஊடாட்டங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. அவை அவ்விலக்கியம் குறித்த புதிய புரிதலையும் உருவாக்குகின்றன.

**சங்க இலக்கியமும் உளவியலும்**

சங்க இலக்கியத்திற்கு பிறிதொரு பெயராக உளவியல் இலக்கியம் எனவும் கூறலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும் புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும் உளவியல் பற்றியனவையே. ஏதேனும் ஒரு மனநிலையை மட்டுமே அல்லது அம்மனநிலைக்குரிய சுழலை மட்டுமே அவை பாடுபொருளாய் கொண்டுள்ளன. எனவே பிராய்டு, யுங் என்பாரின் உளவியற் கொள்கைகள் சங்க இலக்கியத்திற்கு பெரிதும் ஒத்துப்போகின்றன.

சங்கப்புலவர்கள் மொத்தம் 473 பேர். இவர்களில் சுமார் 40 புலவர்கள் பெண்பாற் புலவர்களாக அறியப்படுகின்றனர். பெண்பாற் புலவர்களில் ஔவையாரெ அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். அகமும் புறமுமாக மொத்தம் 59 பாடல்கள் இவரால் பாடப்பட்டுள்ளன. இந்தப் பாடல்களில் மிகுதியான உளாவியல் கூறுகள் இருப்பதைக் காண முடிகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, பதிற்றுப் பத்து, புறநானூறு ஆகிய ஐந்து நூல்களில் பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் அகப்பொருள் துறையையே பெண்பாற் புலவர்கள் அதிகம் பாடியுள்ளனர். அதிலும் தலைவி கூற்றுப் பாடல்கேள மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஏனெனில் தன்மையிடத்தில்தான் தன் ஆழமான உணார்வுகளை எளிதில் வெளிப்படுத்த இயலும்.

**ஔவையார் பாடல்கள்**

ஔவையார் அகமும் புறமும் பாடிய சங்கப்புலவர் ஆவார். அகத்திணைப் பாடல்களைப் பொறுத்த அளவில் நற்றிணையில் 7 பாடல்களும் (129, 187, 295, 371, 381, 390, 394), குறுந்தொகையில் 15 பாடல்களும் (15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388) அகநானூற்றில் 4 பாடல்களுமாக (11, 147, 273, 303) 26 பாடல்களைப் பாடியுள்ளார். ஆண் பெண் நட்பிற்கு சிறந்த இலக்கணமாக ஔவையாரும் அதியமானும் வாழ்ந்த நிலையை அவர்தம் புறப்பாடல் வழி உணரமுடிகிறது. புறநானூற்றில் 33 பாடல்களைப் பாடியுள்ளார்.

**அக இலக்கியமும் உளவியலும்**

மக்களின் காதல் வாழ்வை இன்றளவும் உலகிற்கு எடுத்துரைக்கும் வல்லமை படைத்தவை அக இலக்கியங்கள். அக்காதல் வாழ்வில் களவு மற்றும் கற்பு காலத்தில் ஏற்பட்ட இன்ப துன்ப உணர்வுகளில் மகளிரே மிகுந்த பாதிப்புக்குள்ளாயினர். தலைவனின் பிரிவு, தலைவனைச் சந்திக்க இயலாத தனிமை, அத்தனிமைக்குக் காரணமான சுற்றம், தலைவனின் பிரிவு போன்ற நிலைகளிலிருந்து விலக முடியாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதால் மனஇறுக்கம் ஏற்படுகின்றது. அந்த மன இறுக்கத்தின் வெளிப்பாடே உறக்கமின்மை, பகற்கனவு, திரிபுணர்ச்சி, மனவெழுச்சி வடிவாகவும் மனநோயாகவும் உருவெடுக்கிறது. உளவியல் நோக்கில் காணும்போது இது புலவர்களின் பாடல்ளில் வெளிப்படுகின்றன.

**உளவியல் கூறுகள்**

உளவியல் அறிஞர்கள் ஆய்வுசெய்து பல்வகையான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கண்டறிந்து கூறியுள்ளனர். அவற்றுள் உள்ள சில கூறுகளைக்கொண்டு இலக்கியத்தை அனுகமுடியும். நனவிலி மனம், தற்காப்பு நடத்தைகள், புறத்தோற்றம்,ஒன்றுதல், பின்னோட்டம், தன்முகத் திருப்பம், உள் எழுச்சி அல்லது உணர்ச்சி, புலனுணர்வாற்றல், மனப்போராட்டம், கனவு, மனச்சிக்கல், நார்சிச சிக்கல், மூலப்படிவம், நனவிலிக்குள் மொழி, மொழித்தொடரில் அமுக்கப்பட்ட மொழி போன்றன இலக்கியத்தோடு தொடர்புபடுத்தி ஆய்வுசெய்ய உகந்தவைகளாகு. இக்கட்டுரையின் விரிவஞ்சி கீழ்க்கண்ட ஈடு செய்தல், பின்னோக்கம், உளப்போராட்டம் ஆகிய கூறுகள் மட்டுமே ஔவையின் அகப்பாடல் ஊடாக விளக்கப்படுகின்றன.

**ஈடு செய்தல்**

ஈடு செய்தல் முதல் சாதனை தவறியதற்கு ஈடாகப் பெறுகின்ற அடுத்த சாதனையாகும். எனவே ஈடுசெய்தல் என்பது எப்போதும் ஒரு மாற்று சாதனையைப் பெறுவதைத்தான் குறிக்கிறது. ஆகவே அது ஒரு போலியான சாதனையாகும்.ஈடு செய்யும் செயல்முறையானது முக்கியமாகத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள உதவுகிறது. சில சமயங்களில் மாற்றுத் திருப்தியின் உதவியுடன் ஒரு மனமுறிவுச்

சுழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் பயன்படுகிறது. ஓர் ஆசை குலைக்கப்பெறும் போது வேரோர் ஆசையினைக் கொளவதன் மூலம் திருப்திபடுத்திக் கொள்கிறோம் என்பது உளவியல் கருத்தாகும். (ப.சிவராஜி, பன்முக ஆய்வுக் களங்கள்) இந்த உளவியல் கருத்தை ஒட்டி ஔவையின் பின்வரும் பாடல் அமைகிறது.

> **"அகவன் மகளே! அகவன் மகளே!**
> **மவுனக்கோப் பன்ன நன்நெடுங் கூந்தல்**
> **அகவன் மகளே! பாடுக பாட்டே**
> **இன்னும் பாடுக பாட்டே! அவர்**
> **நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"**
> **(குறுந். 23)**

தோழி அறத்தொடு நிற்கிறாள். அன்னையர் அகவல் மகள் முதலியோார் முன்னிலையில் தலைவியின் களவு வாழ்வை வெளிப்படையாக எடுத்துரைக்க இயலவில்லை. "தலைவனைப் பாடுக" எனத் தயங்கால் சொல்ல இயலாத நிலையில் "குன்றைப் பாடுக" என்கிறாள். "இன்னும் பாடுக பாட்டே அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" எனக் கூறுகிறாள். ஓர் ஊக்கத்தை வெளியிட முடியாத நிலையில் தொடர்புடைய வேறு ஒன்றை வெளியிடல் அல்லது புதிய வடிவத்தில் வெளியிடல் ஆகிய ஈடு செய்தல் நிலை இக்கூற்றில் உள்ளது.

**பின்னோக்கம்**

வாழ்வில் விரும்பத்தகாத நிகழ்வுகள் நிகழும் போதும், விருப்பங்கள், முறிவுற்று உள்ளப்போராட்டம் மிகும் போதும் உள்ளம் தன்னையறியாமல் இறந்த காலத்தின் இயல்பிற்கு சென்று விடுகிறது. இத்தகைய நிலையைப் பின்னோக்கம் (regression) என்பர். இக்கருத்தின் இலக்கிய விளக்கமாக ஔவையின் கீழ்க்கண்ட குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது. வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்தான். ஊரெல்லாம் இரவில் தூங்குகிறது. இந்நிலையில் தலைவியின் கூற்றாக,

> **"முட்டுவேன் கொல் தாக்கு வேன்கொல்**
> **ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு**
> **ஆஅ ஒல்லெனெக் கூவு வேன்கொல்"**
> **(குறுந். 28)**

என அமைகிறது ஔவையின் இப்பாடல்.

இப்பாடல் குழந்தைப் பருவத்தின் அழுகையும், கூப்பாடும், கதறுதலும், மெய்யால் தாக்குதலுமாகிய செயல்கள் இதில் உள்ளன. தலைவி தனிமையின் கொடுமைத் தாங்க இயலாத நிலையில் குழந்தையைப் போல் நடக்க விரும்புகிறாள். இவற்றால் அவளது தனிமை தீர்வதில்லை. இருப்பினும் துன்ப உணர்வுக்கு இது ஒரு வடிகாலாக அமைகிறது. பின்னோக்கம் என்னும் உளத்தற்காப்பு இயங்கு முறைக்குச் சிறந்த சான்றாக இப்பாடல் அமைந்துள்ளது.

**உளப் போராட்டம்**

ஒரு விருப்பத்தை நிறைவு செய்ய எண்ணும் மனம் உள்ளப்போராட்டத்திற்கு ஆளாகின்றது. தன் விருப்பம் சரியா தவறா என்றும் சமூகம் இதனை ஏற்றுக்கொள்ளுமா என்றும் போராட்டம் நிகழ்கிறது. உள்ளப் போராட்டம் பாலுணர்ச்சிக்கு முரண்பட்ட பண்பாட்டு உணர்ச்சி உளப் போராட்டத்தில் பங்குகொள்கின்றது. இவ்விரு உணர்வெழுச்சிகள் இயல்பிலேயே முரண்பட்டிருப்பதால் ஒற்றுமைக்கு வாய்ப்பின்றி ஒன்றை மற்றொன்று ஆளுகைக்கு உட்படுத்துவதில் முனைப்பாகச் செயல்படும். இதில் தத்தமது வலிமையைக் காட்ட தீவிரமாகப் போராடுகின்றன. இவ்விரண்டும் வலிமையானவை என்பது குறிப்பிடத்தக்கது. உடலியல் மனிதனுக்குப் பாலுணர்ச்சியும், சமூக மனிதனுக்குப் பண்பாட்டு உணர்ச்சியும் மூலங்களாக இருப்பதால் இவ்விரண்டில்

எதையும் விட்டுக்கொடுக்க அதே வேளையில் முழுமையாகச் சார்ந்திருக்க முடியாத இக்கட்டான நிலை மனிதனுக்கு ஏற்படுகின்றது என்கிறார் "சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்" என்ற நூலில் தி.கு.ரவிச்சந்திரன்.

தலைவன் பொருள் தேடச் செல்கிறான், செல்லும் வழியெல்லாம் தலைவியை நினைத்துக் கொண்டே செல்கின்றான். இதனால் தலைவி மீது ஏற்படும் காம உணர்வானது வெள்ளப்பெருக்கு போன்று பெருகுகின்றது, எனினும் பொருள் தேடிச் சென்று இடையில் திரும்ப முடியாத இவ்வுலகத்து இயல்பினால் ஏற்படும் தலைவனின் உள்ளப் போராட்ட நிலையை,

**"உள்ளினெ னல்லெனோ யானே யுள்ளி
நினைத்தனெ னல்லெனோ பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லெனோ வுலகத்துப் பண்பே
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
யிறைத்துணச் சென்றற் றாஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக்
கொளவே". (குறுந். 99)**

என்று ஔவையார கூறுகிறார்.

இவ்வாறு சங்க அக இலக்கியங்களை உளவியல் அணுகுமுறை கொண்டு காணும்போது ஏராளமான பாடல்கள் உளவியல் அடிப்படையில் பாடப் பெற்றிருப்பதை உணர முடியும்.

## முடிவுரை

வாழக்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள், போராட்டங்கள் மற்றும் தோல்விகள் உள்ளத்தைப் பாதிக்கின்றன் உள்ளத்தின் நடுநிலை அமைதியைக் குலைக்கின்றன. புறமனத்தில் உண்டாகும் இயல்பான ஆசைகளை, அடக்கி வைக்கும் போது அவை உள்ள இறுக்கமாக, உடல் பிணியாக, மனவெழுச்சியாக உருமாற்றம் பெறுகின்றன. இந்நிலையில் உள்ளம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள மேற்கொள்ளும் கொண்ட முயற்சிகளைத் பற்றி உளவியல் நோக்கில் இப்பாடல்களை அணுகும்போது அறிய முடிகிறது. இந்த பாடல்களில் ஔவையின் உள்ளமும் உரசிச் செல்கிறது. இதன்மூலம் சங்க இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதையும் அதனுள் உளவியல் கூறுகள் அதிக அளவில் இருப்பதையும் காணமுடிகிறது

## பார்வை நூல்கள்

1. இரவிச்சந்திரன் தி.கு, சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2005.
2. இராஜமாணிக்கம் மு, உளவியல் துறைகள், தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.
3. சிவராஜி ப, பன்முக ஆய்வுக் களங்கள், இலக்கியா பதிப்பகம் வெளியீடு, வாணியம்பாடி,2016.
4. நாகராஜன் வி, குறுந்தொகை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், அம்பத்தூர், சென்னை, 2007.
5. பாக்கியமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2010.
6. கருப்பையா கா, சங்க இலக்கியத்தில் ஔவை பாடல்கள் உளவியல் அணுகுமுறை, (முனைவர் பட்ட ஆய்வேடு), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, 2019.
7. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, க்ரியா பதிப்பகம், திருவான்மியுர், சென்னை, 2005.
8. www.anbuoviya.blogspot.com.
9. www.dinamani.com/m.thannappriya.
10. www.mohanawritings.blogspot.com.